# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No. 1250/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகப்பன் | த-பெ | ஆறுமுகம் |
| ஊர்: | : | திருவேலங்குடி | | |
| வயது: | : | 57/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கட்டுமான பொறியாளர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.02.2026**

**எதிரி ஆஜர். இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

1) விபத்தில் இறந்த பழனிக்குமாரை தெரியும். கடந்த 03.02.2020 ம் தேதி காலை 10.30 மணிக்கு திருச்சி - இராமேஸ்வரம் பைபாஸ் ரோட்டில் விபத்து நடந்ததாக நான் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இருந்தபோது தகவல் வந்தது. பின்பு நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது பழனிக்குமார் என்பவர் அடிபட்டு கிடந்தார். ஒரே கூட்டமாக இருந்தது. நான் விசாரித்ததில் மேற்படி நபர் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள் சம்பவம் பற்றி கேட்கவில்லை. சம்பவம் பற்றி நான் போலீசாரிடம் சொல்லவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

<u>குறுக்கு விசாரணை</u>

1) கடந்த 03.02.2020 ம்தேதி குன்றக்குடி காவல் நிலைய ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 03.02.2020 ம் தேதி காலை 10.00 மணிக்கு திருச்சி - இராமேஸ்வரம் தேதிய நெடுஞ்சாலையில் இறந்த போன பழனிக்குமார் சைக்கிளில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தபோது அவருக்கு பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த எதிரி சேகர்

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் TVS phonix இருசக்கர வாகனத்தில் மோதி விட்டதாகவும், அதில் பழனிக்குமாருக்கு பின் தலையில் காயம் ஏற்பட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.26 16:00:39 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No. 1250/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சேது | த-பெ | நாச்சான் |
| ஊர்: | : | மாலையிட்டான்பட்டி | | |
| வயது: | : | 65/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **25.02.2026**

**எதிரி ஆஜர். இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

**முதல் விசாரணை.**

நான் தற்சமயம் மாலையிட்டான்பட்டி வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பழனிகுமார் எனது பேரன் ஆவார். கடந்த 02.02.2020 ம் தேதி என் பேத்தி மாணிக்கவள்ளிக்கு குழந்தை பிறந்து இருந்தது. அதை பார்ப்பதற்காக 03.02.2020 அன்று நாங்கள் போனோம். அன்று காலை 10.30 மணிக்கு சைக்கிளில் ரத்தினா நகர் வெள்ளை வேட்டி சித்தர் கோவில் அருகே காரைக்குடி - திருமயம் பைபாஸ் சாலையில் எனது பேரன் சூரக்குடி மருத்துவமனைக்கு சென்று கொண்டிருந்த போது அவரின் பின் புறமாக வந்த இரு சக்கர வாகனம் எனது பேரன் ஓட்டி வந்த சைக்கிளில் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார். அதில் எனது பேரனுக்கு பின்பக்க தலையில் பலமாக காயம் ஏற்பட்டிருந்தது. நான் மருத்துவமனை சென்று எனது பேரனை பார்த்தேன். நான் போலீசாரிடம் புகார் அளித்தேன் மேற்படி **புகார் அசாஆ 1** ஆகும். விபத்து குறித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார்தான் எழுதினார்கள். புகாரை நான் படித்து பாத்தேனா என்றால் இல்லை. போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனை சென்று எனது பேரனை பார்த்தேன். விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.26 16:00:46 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.